# உலக மருத்துவத்திற்குத் தமிழரின் வர்ம மருத்துவம்

**முனைவர் ந.சண்முகம், பிஎச்.டி.,**
இணைப் பேராசிரியர், தமிழ்த் துறை
ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் வித்யாலயக் கலை அறிவியற் கல்லூரி
பெரியநாயக்கன்பாளையம்
கோவை 641 020

உலக மருத்துவத்துறை, எதிர்விளைவு பக்கவிளைவு இல்லாத மருத்துவத்தை இன்று நாடுகிறது. அது மட்டுமல்லாது பொருட்செலவு இல்லாத மருத்துவமும் மக்களுக்கு இன்று தேவை. இது மிகப் பொருத்தமான காலம். காலத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு இந்தியாவிலேயே உருவான மருத்துவ நுட்பங்களை ஆதாரங்களோடு உலகிற்கு அளிக்க வேண்டும். விருப்பு வெறுப்பு அற்ற ஆராய்ச்சிப் பாங்கான மருத்துவ சிந்தனைகள் மலரவேண்டும். உலக மருத்துவம் இந்தியாவில் உருவான மருத்துவ நுட்பங்களை, சித்தர்களின் மருத்துவ சிந்தனைகளை எதிர்பார்க்கிறது. பக்கவிளைவு எதிர்விளைவு இல்லாத மருத்துவத்தைத் தமிழர்களாகிய நாம் உலகுக்குக் கொடுப்போம். அது தமிழரின் வர்ம மருத்துவம் – சித்த மருத்துவம் ஆகட்டும்.

## வர்ம மருத்துவ நூல்கள்

'வர்மம்' என்ற சொல் தற்காப்பு கலைக்கு உரியதாக ஆகிவிட்டது. அதனால் அச்சொல் ஒருவிதமான அச்ச உணர்வை மக்களுக்கு ஊட்டுகிறது. அவ் அச்சத்தைப் போக்குவது நமது முதல் கடமை.

'வர்மம்' என்பது மனிதனின் உடல், உயிர், மனம் ஆகிய மூன்றையும் பாதுகாக்கும் தெய்வீகத் தன்மை உடைய ஒரு கலை ஆகும். சுமார் 110 தனித்தனி தலைப்புகளில் முப்பதாயிரத்திற்கும் (30,000) மேற்பட்ட பாடல்கள் வர்ம மருத்துவத்துறை சார்ந்து கிடைக்கின்றன. இவ்வளவு பாடல்களைப் படைத்த சித்தர்கள், அவற்றைத் தாக்கும் கலைக்காக படைத்தனர் என்று கூறுவது வியப்பைத் தருகின்றது. இந்நூல்கள் அனைத்தும் தமிழ் மொழியில் உள்ளன. சில நூல்கள் மலையாள எழுத்தில் தமிழ்ப் பாடல்களாக உள்ளன. எனவே வர்ம மருத்துவம் தமிழரின் சொத்து எனக் கூறுவதில் தவறில்லை. இவ் வர்மக் கலையில் பயிற்சி பெற்ற நிபுணர்கள் தமிழகத்தில் குமரி மாவட்டத்தில் வாழ்ந்து வருகின்றனர்.



**Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.**

## வர்மம் என்பது ஆற்றல்

வர்மம் என்ற சொல்லுக்கு வர்ம நூல்களில் தெளிவான விளக்கம் இல்லை.

> "வாசி தட்டும் தானம் வர்ம இடம்"
> "சுவாசம் தட்டும் இடமெல்லாம் வர்ம இடம்"
> "சரத்தின் பேர் வர்மம்
> சரமென்றால் சுவாசமது தங்கும் வீடு"

(வாகட நிதானம்)

வேறு விளக்கம் வெளிப்படையாக இல்லை. பின்வரும் வர்ம கண்ணாடி அடியை நுணுகிப் பார்த்தால் வர்மத்திற்குப் பொருள் தெரிய வரும்.

> "காரணமாய் வர்மமுடன்
> தலமறியார் நரம்பைக் காணார்"

என்ற அடியில் 'தலம்' என்பது 'இடம்'. வர்மம் என்பது இடத்தைக் குறிப்பிடாமை புலனாகும். இடம் என்பது நரம்பு, எலும்பு, சதை போன்றன. வர்மம் என்பது இடத்தோடு சேரும் பொழுது அந்த இடம் வர்ம இடமாகும். எனவே வர்மம் என்பது பருப்பொருளைச் சாருகின்ற நுண்பொருள் என்பது புலனாகின்றது.

> "வந்த வர்மம் இளக்க" (கண்ணாடி)

மேற்காட்டிய அடியில் 'வந்த வர்மம்' எனச் சுட்டப்பட்டுள்ளதால் உடலில் வர்மம் ஒரு பாகத்தில் இருந்து மற்றொரு பாகத்திற்கு வரும், போகும் நிலையில் இயங்கும் தன்மையுடையது என்பது புலனாகிறது.

> "தலங்களையும் குணங்களையும்
> கருதி வர்மத்தின் உள்ளே ஊன்ற வேணும்"

(வில்விசை)

இவ் அடிகளில், இடத்தைத் தெரிந்து வர்மத்தில் ஊன்ற வேண்டும் என உள்ளது. எனவே, இடத்திற்குத் தொடர்புடைய வேறு ஏதோ ஒன்று வர்மம் எனத் தெரிகிறது.

மேற்காட்டிய சான்றுகளைக் கொண்டும், எம் ஆசான் பெருமக்கள் உணர்த்தியதை வைத்தும், யாம் ஆராய்ந்து உணர்ந்ததையும் கொண்டு 'வர்மம்' என்பது 'ஆற்றல்' என்ற கொள்கையை யாம் இங்கு நிறுவுகிறோம். அந்த வர்ம ஆற்றல் தங்கும் இடம் வர்ம இடமாகும். இடம் வர்மம் ஆகாது. ஆற்றல்தான் வர்மம்.



**Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.**

## வர்ம ஆற்றல் உருவாகும் நிலை

உடலுள் வர்ம ஆற்றல் உருவாகும் முறைகளை, சித்தர்கள் தம் நூலுள் பன்னிரண்டிற்கும் மேற்பட்ட நிலைகளில் கூறியுள்ளனர். அவற்றுள் அடிப்படை நிலையை இங்கு காணலாம் . சான்றாக,

"உயிருக்குள் உயிராய் எங்கும்
தானாக நின்ற தற்பரன்"

"பரமான அசைவதற்குள் ஊடாடி
மருவினதோர் வர்மம்"

(வர்ம சூட்சா சூட்சம்)

என்ற அடிகள் அடிப்படை ஆற்றல் உருவாகும் நிலைக்கு ஆதாரமாகும். பிரபஞ்ச ஆகாசத்துள் பிராணன் செல்லும் பொழுது பிரபஞ்ச ஆற்றல் பிறக்கும். உடல் ஆகாசத்துள் பிராணன் செல்லும் பொழுது உடலுக்குத் தேவையான வர்ம ஆற்றல் பிறக்கும்.

அவ் ஆற்றலின் செயல்பாட்டை, பயனைக் கொண்டு அவ் ஆற்றலை, வர்மம், காலம், சுவாசம், பிராணன், கலை, சரம், வாசி, சிவம், புரவி, சரப்பை, அடுக்கு, அடங்கள், வாசல், முடிச்சு, குகை, மலை, சத்தி, அமிர்தம், அருள், இறை எனப் பல்வேறு நிலைகளில் வர்ம நூல்கள் காட்டும். சான்றாக,

"வர்ம மென்றும் வாசி யென்றும்
புரவி யென்றும்
கார் என்றும் உயிர் என்றும்
மாய்கை என்றும்
பிராணன் என்றும் காலம் என்றும்
சுவாசம் என்றும்
சரம் என்றும் யோகம் என்றும்
பரம் என்றும்
சிவம் என்றும் இவையெல்லாம்
வர்ம மென்றும் சொல்லலாகும"

(வாகட நிதானம்)

என்ற பாடலைக் காண்க. வர்மத்தின் விரிவுதான் மேற் சுட்டப்பட்டவைகள். இவை அனைத்தையும் கற்றுத் தேர்ச்சி பெற 12 ஆண்டுகள் ஆகும்.



**Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.**

## *வர்ம ஆற்றலும் இடமும்*

***வர்ம ஆற்றல் இருக்கும் இடத்தை குரு மூலம் அறிந்து கொள்வதே வர்மக் கலையின் அடிப்படைக் கல்வி***. *நரம்பு முடிச்சு, எலும்புச்சுழி, நரம்பு மையம், உள்ளுறுப்பு, சதை போன்றன வர்ம இடங்களாகும். இவ் வர்ம இடங்களின் எண்ணிக்கை, வர்மப் பள்ளிகளுக்கு* (School of Thoughts) *ஏற்ப மாற்றம் பெறுகின்றன. அது போல ஒரே வர்ம இடத்திற்கு வேறு வேறு பெயர்களும் சித்தர்களால் கொடுக்கப்பட்டுள்ளன. ஒரே பெயர் இரண்டு மூன்று வேறு வேறு வர்ம இடங்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தெளிவாகத் தெரிந்து கொண்டு வர்மத்தைக் கற்க வேண்டும்.*

*"தல மதனை அறிய வென்றால் பிரிவு*
*எண்ணாயிரம் முடிச்சு அறிய வேண்டும்"*

*(வில்விசை உட்சூத்திரம்)*

*இவ் அடிகளால் எட்டாயிரம் இடங்களில் வர்ம ஆற்றல் பாய்கின்றமை தெரிகின்றது.*

*"படுவர்மம் பதினெட் டாகும் பாங்கான*
*தொடுவர்மம் தொண்ணூற் றாறாகும்*
*பக்கவர்மம் எட்டாகும் நரம்புடனே*
*எல்லு வர்மம் எண்பத்தி ஆறாகும்*
*கொல்லு மப்பா மறுவர்மம் நாற்பத்தஞ்சாகும்*
*ஆகவர்மம் இருநூற்று ஐம்பத்து மூன்றாகும்"*

*என்ற அகஸ்தியர் பாடிய நரம்பறை பாடலை நோக்க வர்ம எண்ணிக்கை பொது நிலையில் இருந்து வேறுபட்டிருப்பதை அறியலாம். பொது நிலையில் வர்மம் 108. சான்றாக,*

*"வீரான படுவர்மமம் பன்னிரண்டு*
*விதமான தொடுவர்மம் தொண்ணூற்றாறு"*

*(வர்ம சாரி)*

*படுவர்மம்12. தொடுவர்மம் 96. ஆக மொத்தம் 108 வர்மம். இவை சப்த தாதுக்களின் வெளிப்பாடாகும். சான்றாக,*

*"கருவான தொகை சரியாய் நூற்றெட்டாச்சு*
*சர்மமென்ற இவை தானே சப்ததாது"*

*(வர்மசூடி)*



**Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.**

*108 வர்ம இடங்களிலும் வர்ம ஆற்றல் மிகுந்தாலும் குறைந்தாலும் சப்த தாதுக்களின் நிலை மாறுபடும். எந்த வர்மம் எந்த தாதுவோடு தொடர்புடையது என்பதைத் தெரிந்து உடல் நோயை நீக்கலாம்.*

## நோய் நீக்கும் வர்ம மருத்துவம்

*வர்ம ஆற்றல் மனிதனின் உடல், உயிர், மனம் ஆகிய மூன்றின் நோயையும் நீக்கும் மருத்துவக் கலை ஆகும். அது நோய் நீக்கும் மருத்துவக் கலை என்பதற்குப் பல சான்றுகள் இருப்பினும் ஓரிரு சான்றுகளை இ ங்கு காணலாம்.*

*"பாதம் முதல் சிரசுவரை அடங்கும்*
***வர்மம் பலனறிய*** *நாமிதை பகருவோம்"*
*(பதினெண்சித்தர்வல்லாதி)*

*"கள்ள முற்றால் அத்தலங்கள் பிணியுமாகும்*
*களங்கம் அற்றால்* ***அத்தலங்கள் சுகமும் காணும்****"*
*(வர்மசூடி)*

*"வாழ்த்தி வைத்தேன்* ***வையகத்தோர்***
***பிழைக்க*** *வென்று"*
*(கைமாத்திரை திறவுகோல்)*

*"வாழ்த்தவே அமர்த்து சூத்திரம்*
*வகையாய் செய்வீ ராகில்*

*களங்கமே வினையொன் றில்லை*
***கலங்கவும் வேண்டாம் நோயால்****"*
*(லாட சூத்திரம் 300)*

*மேற்காட்டிய அடிகள் மூலம் வர்மம் மனிதனை நோயில் இருந்து காப்பாற்றும் ஓர் அற்புதமான மருத்துவக்கலை என்பது புலனாகும்.*

## வர்ம மருத்துவத்தின் அளவுகோல்கள்

*வர்ம மருத்துவத்தின் மூலம் நோயறிதல், நோய் நீக்குதல் ஆகியவற்றிற்குப் பின்வரும் கூறுகள் அடிப்படை அளவு கோல்களாக உள்ளன. அவை பஞ்சபூதம், முக்குற்றம், நாடிநிலை, விரலளவு, கைப்பாகம், செய்பாகம், மூலிகைமருந்து முதலியன ஆகும்.*

***இவற்றுள் 'கைப்பாகம்', 'செய்பாகம்' என்பன மிக முக்கியமானவை. இவை குருமுறை பயிற்சியில் தான் தெளிவுபடும்.***



**Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.**

## கைப்பாகம் செய்பாகம்

"செய்பாகம் அறிய வேணும் புனிதமுடன்
கைப்பாகம் தலங்கள் வேணும்
ஓம்என்ற மாத்திரையும் விபரம் வேணும்
உத்தமனே பாதைகள் ஓர்மை வேணும்"

(வர்ம சூட்சா சூட்சம்)

தலங்கள் என்பது வர்ம ஆற்றல் நிறைந்த இடம். மாத்திரை என்பது அவ்விடத்தில் கொடுக்க வேண்டிய அழுத்தத்தின் அளவு. கைப்பாகம் என்பது விரல் அல்லது விரல்கள் பதிக்கும் முறை. செய்பாகம் என்பது மேற்சுட்டிய மூன்றையும் ஒரே நிலையில் செயல்படுத்தி வர்ம ஆற்றலை இயக்கும் அல்லது கட்டுப்படுத்தும் அல்லது மிகைப்படுத்தும் முறையாகும். இதனை முறையாக கற்க குரு வழி முறை தேவை.

செய்பாகம் பின்வரும் நிலைகளில் செய்யப்படுகின்றன. அவை ஏந்தல், கறக்கல், பதுக்கல், அமர்த்தல், குத்தல், பிடித்தல், இருத்தல், நழக்கல், அணுக்கல், அசைத்தல், தட்டல், தடவல், பின்னல் போன்றன செய்பாகங்களாகும். சான்றாக,

"பிடிக்க நழக்க கணக்கு பதுக்குத்
தாக்கு துன்பம் வந்து அணுகாமல்
பதிவு செய்யும் துறையைக் கேளு. . ."

"இடக்கை கொடியில் வைத்து
தப்பாமல் வலக்கையால் பஞ்சதட்டு
தட்டயிலே மயக்கம் போகும்"

(வர்மசூடி)

என்ற பாடல் அடிகளைக் காணலாம்.

## ஒரு வர்மம் – பல கைப்பாகம் செய்பாகம்

ஒரு வர்மத்திற்கு ஒன்றிற்கு மேற்பட்ட கைப்பாகம் செய்பாகம் செய்து பல நோய்களை ஒரு வர்மத்தால் தீர்க்க முடியும். இம்முறை வர்ம மருத்துவத்தின் சிறப்பம்சமாகும். சான்றாக,

" அறைகிறேன் கீழ்நாடி அருகு தன்னில்
வானான பருத்திவிதை விரலில் தாக்கி
உறுதியாம் மேல்வசம் அமர்த்தும் போது
கோனான வாய்பிளந்து வார்த்தை பேசும்
கொடிய கீழ்வசம் சுழிக்க சோரைமாறும்
தேனான வலவசம் கறக்கிச் சுற்ற
தீர்ச்சையாய் விறையல்போம் நடுக்கம் மாறும்"



Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.

"மாறுமே இடப்பக்கம் அமர்த்தி விட்டால்
வளம்பெரிய புலம்பல்பல கோட்டி போகும்"

(வர்ம சூடி)

## வர்ம மருத்துவப் பள்ளிகள் (VARMA SCHOOL OF THOUGHTS)

1978-இல் இருந்து இத்துறை சார்ந்த வர்ம ஞானியர் பலரிடம் இன்று வரை பயிற்சி பெற்று வருகிறேன். எனது வர்ம ஆராய்ச்சியின் பயணம் சுமார் 28 ஆண்டுகள் ஆகின்றது. அந்த அனுபவத்தின் காரணமாக பின்வரும் ஆய்வு சிந்தனையை உங்கள் முன் வைக்கிறேன்.

அகஸ்தியர், போகர், இராமதேவர் என்ற மூன்று சித்தர்களின் பாரம்பரியத்தில் வர்ம நூல்கள் வளர்ந்துள்ளன. இவை தவிர தேரையார், சட்டைமுனி, கோரக்கர், திருவள்ளுவர் என்ற குரு பாரம்பரிய வர்மப் பள்ளிகளும் உள்ளன.

**அதுபோல மூளையை மையமாகக் கொண்ட வர்மப்பள்ளிகள், இருதயத்தை மையமாகக் கொண்ட வர்மப் பள்ளிகள் மூளை, இருதயம் ஆகிய இரண்டையும் மையமாக கொண்ட வர்மப் பள்ளிகள், மூலாதாரத்தை மையமாகக் கொண்ட வர்மப் பள்ளிகள் என நான்கு நிலைகளில் வர்மங்களைப் போதிக்கின்ற வர்மப் பள்ளிகள் இன்றும் உள்ளன. ஒரு வர்ம மருத்துவர் மேற்சுட்டிய நான்கு நிலைகளிலும் பயிற்சி பெறுதல் வேண்டும்.**

ஒன்றுக்கு மேற்பட்ட வர்மப் பள்ளிகளின் கருத்துருவை ஒருவர்ம நிபுணர் கற்க வேண்டும். அக்கல்வியால் ஒரு வர்மம் பல நோய்களைக் குணமாக்கும். கைப்பாகம் செய்பாகம் மாத்திரை கணக்கு போன்றவற்றை ஒரே நாளில் கற்க முடியாது. குருகுல முறையில் குருவோடு அமர்ந்து நெழிவு சுழிவுகள் தெரிதல் வேண்டும். நரம்பின் பிரிவு அறிதல் வேண்டும். வர்மக் கல்வியின் பூரணத்துவம் படிப்பவனின் மனநிலையைப் பொறுத்து அமையும்.

இத்தகு நிலையில் விரிந்து பரந்து செல்லும் வர்மக் கலையில் நோய் நீக்கும் முறை பற்றி ஒரு சிறிது இக்கட்டுரையில் கண்டோம். இதையும் கடந்து வர்மக்கலை பல்வேறு நிலையில் பரிணமித்து நம் வாழ்வோடு வாழ்வாக கலந்து உள்ளது.

இக்கலையைக் கற்றுக் கொடுக்க பல நிபுணர்கள் இருக்கின்றனர். பல வர்ம நூல்களும் உள்ளன. வர்மநிபுணர்கள், அரசு பதிவு பெற்ற சித்த மருத்துவர்கள் போன்றோருடன் இணைந்து செயல்பட்டால் வர்ம மருத்துவம் உலக அளவில்



**Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.**

*விரியும். மருத்துவ உலகம் சித்த மருத்துவர்களான உங்களை எதிர்பார்க்கிறது. வர்ம மருத்துவம் உங்களை உயர்த்தும். வர்மமும் உயரும். உலகிற்கு வர்ம மருத்துவம் அற்புதமான கொடையாகும். சித்தர்கள் மனித குலத்திற்குக் கொடுத்த வர்ம மருத்துவம் சித்த மருத்துவர்களால் உலக மருத்துவத்தை ஆளும். உலகம் உங்களை எதிர்பார்க்கிறது. உருவாகட்டும் மீண்டும் ஓர் சித்தர் இயக்கம். வேத சக்தி உலகாளட்டும்.*

***"வர்மமே ஆரோக்கியம்"***
***"வர்மமே இறை"***

✷✷✷



**Presented and published by Dr.N.Shunmugom, Ph.D. on 25th November 2006 at 4th National Siddha Doctors Conference, Chennai.**